நாட்டு மொழி காக்கக் கூட்டு முன்னணி தேவை

Phone No 4502

Regd. No. M. 5458

விலை அரை அணா

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (2-6-50) வெளியீடு (3-6-50) [இதழ் 268

பொல்லாத தடைகளை போரிட்டுத்தகர்த்திடுவோம்

மறுமலர்ச்சிப் பணிக்கு ஊறு - - செய்வோரைமட்டந்தட்ட வேண்டும்

பகுத்தறிவுப் பாலூட்டி பழந்தமிழை வளர்த்திடுவோம்

அடக்குமுறைக்கு அஞ்சோம்; அறிவுப்பணியைக் கைவிடோம்

(0)

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுத் தீர்மானங்கள்

இந்தியைத் தேசிய மொழி என்ற பெயரால் கட்டாயப் படுத்துவதன் மூலம் மும்மொழிகளைக் கற்கச் செய்யும் கொடுமைக்கு தமிழ்க் குழந்தைகள் ஆளாக்கப்படுவதைக் கண்டித்து, பல கட்சித் தலைவர்களையும் தமிழ்ப் பற்றுக் கொண்டோரையும் ஒன்று சேர்த்துக் கூட்டு முன்னணி அமைக்க வேண்டுமென்று கோவை முத்தமிழ் மாநாட்டில் தீர்மானம் மூலம் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களை கேட்டுக்கொண்டது.

திருச்சி, சென்னை வானொலி நிலயங்களில் அறிவைப் பாழாக்கும் புராணப் பிரசாரங்கள் நடத்துவது தீர்மான மூலம் மாநாட்டில் கண்டிக்கப்பட்டது.

தீர்மானங்கள்

முன்மொழிந்தவர்:- கே. ஏ. மதியழகன்.

வழிமொழிந்தவர்கள்:- ஏ. சித்தையன், ராம. அரங்கண்ணல்.

(1) தமிழ்மக்கள்கல்வியறிவு பெறவும், போதுமான வாய்ப்பின்றி வாடும் நிலையிலும், தாய்மொழியறிவு பெற வசதியில்லாமல் திண்டாடும் நிலையிலும், தமிழ்க் குழந்தைகள் இருமொழிகளவே பயிலக்கூடிய வயது நிறைவதற்கு முன்பே, இந்தியையும் தேசிய மொழி என்ற பெயரால் கட்டாயப்படுத்துவது மூலமாக மும்மொழியைக் கற்கச் செய்யும் கொடுமையை இம்மாநாடு கண்டிக்கிறது.

(1-எ) மும்மொழியைப் பயிலவேண்டிய துயரத்திற்கு, ஆளாகிய தென்னாட்டுப்பள்ளி பிள்ளைகள், தமது தாய்மொழியும், வட்டார மொழியும் முதல்மொழி என்று கூறப்படுவதுமான தமிழை(அதைப் போலவே தெலுங்கு முதலியவற்றை) பயிலாமல் இலக்கிய மொழி அல்லது பிற இந்திய மொழி, உலகமொழி என்ற ஏதேனும் ஒன்றைப் பயில்வதானாலும் பயில உரிமையுண்டு, என்று அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ள வெட்கப்பட வேண்டிய சென்னை அரசியலாரின் கல்வித் துறை திருத்தச் சட்டத்தை இம்மாநாடு மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(1-பி) பலமுறையாலும் தந்திர சூழ்ச்சித் திட்டத்தாலும் இந்தி மொழியை விரும்பாத மக்களிடம் புகுத்துவதோடு, இந்தி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டி வருவதை தமிழ் நாட்டிலுள்ள பலதிறத்தாலும் உணரத்தொடங்கி உள்ளமையால் இத்தகைய இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்ட, பல கட்சித் தோழர்களையும், கட்சிசாராத் தமிழ்ப் பற்று மிக்காரையும் ஒன்று கூட்டி ஒரு கூட்டு முன்னணி அமைக்கவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

மு-மொ:- முருகசுப்பிரமணியம்.

வ.மொழி;- நாரா. நாச்சியப்பன், பண்டித. அ. கிருஷ்ணசாமி.

(2) தமிழை இலங்கையின் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்த அரசாங்கத்தின் முயற்சியை இம்மாநாடு பாராட்டுகிறது.

தமிழைத் தமிழ் நாட்டின் அரசியல் மொழியாக ஆக்கத் துணிவுகொள்ளாத சென்னை அரசாங்கத்தின்போக்கு கண்டு இம்மாநாடு வெட்கப்படுவதுடன், இனியேனும் அரசியல் மொழியாக்க முயற்சியை மேற்கொள்ளுமாறு சென்னை அரசாங்கத்தினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

மு-மொ:—காஞ்சி.கலியாணசுந்தரம்.

வ-மொ:- சின்னதுரை, அ.ச. நடராஜன்.

(3) முத்தமிழாகிய இயல், இசை, நாடகம் மூன்றும் மக்கள் வாழ்க்கையோடு இயைந்து விளங்கினால்தான் தமிழர்கள் வாழ்வும், வளமும் பெற்று உரிமையோடு திகழ்வார்களாகையால், அவைகளிலே இன்றுபுகுந்துள்ள மூடநம்பிக்கையையும் மதவெறியையும் நீக்கி, பகுத்தறிவு வழியில் அவற்றை வளர்க்க முன்வர வேண்டும் என இம்மாநாடு முடிவு செய்கிறது.

மு-மொ:- காஞ்சி மணிமொழியார்.

வ-மொ:- பா. கண்ணன்.

(4) நாட்டின் மறுமலர்ச்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஏழு லட்சம் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்

(0)

ஐ. எல். ஓ. மாநாடு தொழிலாளரின் உண்மைப் பிரதிநிதித்வம் வாய்ந்ததல்ல

(0)

ஹிந்த் மஸ்தூர் சபாவின் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 1—

அடுத்த மாதம் ஜினிவாவில் நடைபெறவிருக்கும் ஐ. எல். ஓ (சர்வதேச தொழிற் சங்க) மாநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ள இந்தியக் குழுவினரில் தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லை என்றும், ஐ. எல். ஓ 1949-ம் ஆண்டு தீர்மானத்திற்கு இது விரோதமானதென்றும், ஐ. எல். ஓ "கிரடென்ஷியல்ஸ் கமிட்டி கூட்டம்" ஹிந்த் மஸ்தூர் சபா குற்றஞ் சாட்டியிருக்கிறது.

7 லட்சம் தொழிலாளர்களின் பிரதிநிதி ஸ்தாபனமாக தன் ஸ்தாபனத்தைக் கலந்தாலோசிக்கவில்லை என்றும், ஹிந்த் மஸ்தூர் சபா குறிப்பிட்டிருக்கிறது. அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸும் இந்திய கோஷ்டியைக் குறித்து மறுப்பை அனுப்பியிருக்கிறது.

இந்திய சேனாதிபதி கரியப்பா

இந்தியா திரும்புகிறார்

புதுடில்லி, மே 1—

இந்திய சேனாதிபதி ஜீ. கரியப்பா ஜூன் 11-ந் தேதி இந்தியா திரும்புவதாக, பாதுகாப்பிலாகா செய்தி ஒன்று கூறுகிறது.

இம்பீரியல் ராணுவத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவர் லண்டன் சென்றிருக்கிறார்.

இருபது நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை

(0)

பெண்ணுரிமை காக்க தோழர் டிரிகெவ்லீ திட்டம்

நியூயார்க், ஜூன் 1—

உலகெங்கும் உள்ள பெண்கள் அரசியல், சமூக பொருளாதாரத் துறையில் உரிமைகளைப் பெறுவதற்காக என்ன வழிகளைக்காண்பது என்பது பற்றி, ஐ. நா. பெண்கள் அந்தஸ்து கமிஷன் சமீபத்தில் கூடி முடிவு செய்திருக்கிறது.

இன்னும் 20 நாடுகளில் பெண்களுக்கு வோட்டுரிமை கிடையாது என்ற நிலைமை இருந்து வருகிறது.

கமிஷன் கேட்டுக்கொண்ட தற்கிணங்க ஐ. நா. காரியதரிசி டிரிகெவ்லீ பெண்களுக்குச்சரி சமத்துவ அரசியல் உரிமை கிடைப்பதற்கான ஒரு நகல் திட்டத்தைத் தயாரித்துதர ஒப்புக்கொண்டிருக்கிறார். —ரூளோப்

லண்டன், ஜூன் 1—

பார்லி ஏற்றப்பட்டிருந்த பிரிட்டிஷ் கப்பலில், 18 தினங்களில் 7896 எலிகள் பிடிபட்டு கொல்லப் பட்டிருக்கின்றன. ஒரே கப்பலில் இவ்வளவு எலிகள் பிடிபட்டது ஒரு சிசார்டாகும்.

பிடிபடாதவர் சுடுபட்டார்!

சிங்கப்பூர், ஜூன் 1—

பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு அளிக்கப்படும் என்று ஒருவரை போலீஸார் விளம்பரப்படுத்தியிருந்தனரோ, அந்த நபர் பயங்கரவாதி கோலாம்பூருக்கு 4 மைலில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

கரன்சி நோட்டுக்குத் தடை

பர்மாவிலும் செல்லுபடியாகக் கூடிய இந்திய கரன்சி நோட்டுகள், இந்தியாவிற்குத் தபால் மூலம் வருவதை, இந்திய சர்க்கார் தடைசெய்திருப்பதாகத் தெரிகிறது. இதற்கான சுற்றறிக்கை தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

லண்டன், ஜூன் 1—

இவ்வாண்டு நடைபெறவிருக்கும் பிரிட்டன் திருவிழாவில், ஏராளமாக அயல்நாட்டு மாணவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். இவர்களை பிரிட்டிஷ் குடும்பத்தினருடன் தங்கச் செய்ய, வசதி செய்ய முடியுமா என்று இப்பொழுது யோசிக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் அமைதிகாண..?

(0)

மலேயா பாதுகாக்கப்படவேண்டும்

பிரிட்டிஷ் காலனி அமைச்சர் கருத்து

சிங்கப்பூர், ஜூன். 1—

"உலகில் அமைதி நிலவச் செய்ய மலேயாவை அவசியம் பாதுகாத்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் கீழ்க்கோடியிலும், உலகிலும் சமாதானம் நிலவ இது அத்யாவசியமாகும்" என்று பிரிட்டிஷ் காலனி மந்திரி ஜேம்ஸ்கிரிபித்ஸ் பினாங்கில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் மலேயாவில் மட்டுமுள்ளதென்று சொல்லிவிட முடியாதென்றும், அவர்களு[illegible] வெளியிடத்திலிருந்து ஊக்கமளிக்கப்படுகிறதென்றும் அவர் கூறினார்.

மாலை மணி

சென்னை 2—6—50 வெள்ளிக்கிழமை

முத்தமிழ் மாநாட்டு முடிவுகள்

ஒரு மாநாட்டின் இன்றியமையாச் சிறப்பு அது நிறைவேற்றும் முடிவுகளிலேதான் அடங்கியிருக்கிறது!

ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்தோ அல்லது செயல் குறித்தோ, இறந்தகால நிலைமைகளை நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்டு, அவைகளை நிகழ்கால நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத், தாழ்வானவற்றைத் தள்ளி, உயர்வானவற்றை ஏற்றுக்கொண்டு, அப்படித் தேர்ந்துகொண்டவைகளை வருங்காலத்திற்கு வேண்டுவனவற்றோடு இணைத்துத் திட்டம் தீட்டிக்கொள்வதே மாநாட்டில் செய்யும் சிறந்த முடிவாகும். அதற்கிணங்க, கோவையில் கூடிய முத்தமிழ் வளர்ச்சி மாநாடு, காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றவகையில் முத்தமிழ்வளர்ச்சிக்கான அரிய முடிவுகளை நிறைவேற்றியிருப்பது பெரிதும் போற்றி வரவேற்கத்தக்கதாகும்.

மாநாட்டின் முடிவுகளை ஆய்ந்து பார்த்தால், தமிழைச் சூழ்ந்திருக்கும் பகைப் படலங்களைப் போக்க வேண்டுமென்பதும், தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் நலிவைப்போக்கி, அதற்கு நலமுண்டாக்கவேண்டும் என்பதும், தமிழின் வளத்தைப் பெருக்குவதற்கான வழி பலவற்றையும் காணவேண்டும் என்பதும் முக்கிய உட்கிடக்கைகளாக இருக்கக் காணலாம்.

தமிழகத்தின் தாய்மொழியான தமிழ், சென்னை அரசியலாரின் பாடத்திட்டத்தில் மதிப்பற்ற முறையில் புறக்கணிக்கப் பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கப் பட்டிருப்பதோடு, இந்தி வல்லரசைத் திராவிடத்தின் நிலைநாட்டும் தீயஎண்ணத்தோடு, அரசியல் மொழி, பொது மொழி, பரவிய மொழி, இந்திய மொழி என்ற சாக்கு போக்குகள் காட்டி, இந்தியை நுழைக்கும் ஏகாதிபத்திய திட்டத்தை மாநாடு எதிர்த்திருக்கிறது. அது மிகவும் பாராட்டி மகிழத்தக்க முடிவாகும். இந்தி மொழி தமிழகத்திற்கோ, திராவிடத்திற்கோ தேவைப்படாத—பயன்தராத—உயர்வு நல்காத—மாறாகத் தமிழுக்கு கேடுபயக்கும் மொழியாகும் என்றும், அது திராவிடத்திற்குப் பொது மொழியாகவோ அரசியல் மொழியாகவோ, இருக்க வேண்டிய இன்றியமையாமை எதுவுங் கிடையாது என்றும், உலகப் பொது மொழியாகிய ஆங்கிலமும், தாய்மொழியும் மட்டும் படித்தாலே போதும்; வேறுமொழி எதுவும் தேவையில்லை என்றும் அறிஞர்கள் எடுத்துக் கூறிய பிறகும், கிளர்ச்சிகள் செய்த பிறகும், எதிர்ப்புணர்ச்சி காட்டியபிறகும் இந்தி ஏகாதிபத்யம் திராவிடத்தில் உருவாக்கப் படுகிறது என்றால், அது திராவிடப் பெருங்குடி மக்களால் அழித்துஒழிக்கப்படவேண்டிய ஏகாதிபத்யமாகும். அந்த அரிய பணியினைச் செய்து முடிக்க, திராவிடர்களின் ஒன்று திரண்ட சக்தி முன்வரவேண்டும் அதற்குத் திராவிடத்தில் நிலவும் பல்வேறு கட்சிகளினுடையவும், கட்சிப் பற்றில்லாதாருடையவுமான கூட்டு முயற்சி மிக மிகத் தேவை. இந்த உண்மை நிலையை நன்கு அறிந்து, இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்த்தழிக்கக் கூடிய கூட்டு முன்னணிப் படையொன்றைத் திரட்டும் பணியினைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரிடம் மாநாடு முடிவின் மூலம் ஒப்படைத்திருக்கிறது இந்த முடிவு, பேரொலிகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டிருப்பதைப் பார்த்தால், மாநாட்டில் குழுமியிருந்த மக்கள் இந்தி ஆதிக்கத்தை முறியடிக்க எத்துணைய அளவு ஆர்வங் கொண்டிருக்கின்றனர் என்பது எளிதில் விளங்கும். கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிலே, மக்கள் காட்டிய ஆர்வம் நாடெங்கும் கிளர்ந்தெழ ஆரம்பித்துவிட்டால், இந்தி ஆதிக்கம் மட்டுமல்ல, வடநாட்டு அரசியல், பொருளாதார ஆதிக்கமும் சரி, வேறு எந்த நாட்டு ஆதிக்கமானாலும் சரி, தாமாகவே வெருண்டோடி விடும் என்பது திண்ணம். ஆகவேதான் தமிழர்களாய்—திராவிடர்களாய் விளங்கும் பெருங்குடி மக்கள் அனைவரும் கோவை மாநாட்டின் இம்முடிவைச் செயல் முறையில் காட்டிடத் தம்மாலான ஒத்துழைப்பைத் தர முன்வரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். வேண்டாத பிறமொழி ஆதிக்கம் ஒழிவதால்தான் தமிழ் வாழ முடியும்—வளர முடியும்—வளம் பெறமுடியும்!

இயல், இசை, கூத்து ஆகிய மூன்று துறைகளிலும் புத்திலக்கியங்கள் காணவும், அவை பற்றி இருக்கும் இலக்கியங்களில காலத்திற்கும், கருத்திற்கும் ஏற்றவற்றைக் கொள்ளவும், மக்கள் வாழ்வுக்கு நலம் பயக்காமல் இழிவையும், பழியையும், அழிவையும் தேடித் தரும் பிற்போக்கு இலக்கியங்களைக் கடிந்தொதுக்கவும், அவ்விலக்கியங்களுக்கெல்லாம் புத்துரைகள் புதுக்கவும், புதுக்கியவரை ஆதரிக்கவும், முத்தமிழ் இலக்கியங்கள் இயற்றிடுவோரை ஆதரித்துக் காப்பாற்றவும் ஆன அரும் பெரும் செயல்களைச் செய்ய வேண்டி, "முத்தமிழ்ப்பெருமன்றம்" என்ற ஒரு நிறுவனத்தை, மாநாடு நிறுவியிருப்பது நல்ல ஆக்க வேலைக்கான அறிகுறியாகும். நாவலர் ச. சோ. பாரதியார் தலைவராகவும்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் செயலாளராகவும் இருக்கிறார்களென்றால், அப்பெருமன்றத்தின் சிறப்பு, தானே வெளிப்படுகின்றது. கதைகள்—கட்டுரைகள்—கவிதைகள்—இசைப் பாட்டுகள்—நாடகங்கள்—தனிப்பெரு நூல்கள் முதலான இலக்கியங்களை இயற்றிடுவோரும், இயற்றமிழ் வல்லாரும், இசைவாணர்களும், நடிகர்களும் இப்பெரு மன்றத்தில் பெருவாரியாகச் சேர்ந்து, மன்றத்தின் நோக்கத்தை நல்ல முறையில் ஈடேற்றிவைக்க வேண்டுமென்று பெரிதும் வேண்டுகிறோம்.

இலங்கையில் தமிழை அரசியல் மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதைப் பாராட்டி, சென்னை அரசியலார் அவ்வாறு செய்ய இனியும் துணிவு கொள்ளாமைக்கு வெட்கமும், வருத்தமும் தெரிவித்து, தமிழை அரசியல் மொழியாகத் தமிழகத்தில் ஆக்கவேண்டுமென்று வற்புறுத்தி, மாநாடு முடிவுசெய்திருப்பதைக் கண்டபிறகாவது, சென்னை அரசியலார்க்குக் கண்திறக்கட்டும். அப்படி அரசியலாரின் கண் திறக்காவிட்டால், திறக்கும்படி செய்யவேண்டிய கடமையைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்

குருட்டு வழியிற் செல்லும் இலக்கியக் கருத்துக்களை நீக்கிவிட்டுப், பகுத்தறிவுக்கு ஒத்த வழியில் இலக்கியக் கருத்துக்கள் இருக்க வேண்டும் என்று மாநாடு முடிவுசெய்திருக்கிறது இந்த நல்ல முடிவு நடைமுறையில் கைக்கொள்ளப்பட்டால், நாட்டின் தரமும் உயரும், மக்களின் வாழ்வும் பண்படும்.

புதுமைக் கருத்துக்களையும் தேவையான புரட்சிக்கருத்துக்களையும் கொடுத்து. மக்களைப் பாழ்பட்ட பழமைப் பாதையிலிருந்து நீக்கி, நல்ல பகுத்தறிவு வழியில் நடத்திச் செல்லக்கூடிய ஏடுகள், நூல்கள், நாடகங்கள் இவற்றை, அடக்குமுறைச் சட்டங்கொண்டு தடைசெய்து வரும் அரசியலாரின் கோழைத்தனமானபிற்போக்குச் சக்தியைக் கண்டித்து, அந்தத் தடைகளை நீக்கவேண்டுமென்று மாநாடுமுடிவின் மூலம் வற்புறுத்தியிருப்பது வரவேற்கக் கூடியதாகும். முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் கூடியிருந்தோரின் ஏகோபித்தக் குரலே முடிவாக வெளிப்படுகிறது. மாநாடு, நாட்டுமக்களின் மனநிலைக்குஒரு எடுத்துக்காட்டு. ஆகவே, இந்த உண்மைகளை அறிந்து, அரசியலார் தம்மை தாமே திருத்திக்கொள்ளவேண்டும்; இல்லையேல், நாடு திருத்தியே தீரும்!

தமிழ் நாட்டிற்குத் தனி வரலாறு எழுதப்படவேண்டுமென்று கொண்டுள்ள முடிவும்; வானொலி நிலையங்கள் தமிழுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் பயன்படவேண்டும் என்று செய்திருக்கும் முடிவும், மக்களின் முயற்சியால் நிறைவேற்றப் படவேண்டும். ஆவனபுரிய பொதுமக்கள் ஆங்காங்கு திரளவேண்டும்.

பொதுவாக மாநாடு நல்ல, அரிய, தேவையான முடிவுகளை நிறைவேற்றியிருப்பது கண்டு மகிழ்கிறோம், மாநாட்டை வெற்றி பெறச்செய்வதற்கு முக்கிய உழைப்பாளர்களாக இருந்த அனைவரையும் பாராட்டுகிறோம்.

மாநாட்டு முடிவுகள் வெற்றி பெறட்டும்! எங்கும் முத்தமிழ் முழங்கட்டும்!

நாட்டுமொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்காக தீட்டப்பட்டுள்ள இலக்கியங்களையும், ஏடுகளையும் நடிக்கப்படும் நாடகங்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்து வருவதையும், தடை விதிப்பதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இதுவரை விதித்துள்ள தடைகளையும், பறிமுதல்களையும் உடனே நீக்க வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது. வற்புறுத்தலை மதியாமல் அரசாங்கம் மேலும் இதே போக்கிலே அடக்குமுறையை கையாண்டு வருமானல் பேச்சுரிமையையும், எழுத்துரிமையையும் காக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென தலைவர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மு-மொ:-சோமசுந்தரம்
வ-மொ:-நா. சுந்தரராஜன்.

(5) தமிழ் நாட்டின் வரலாறு சரியான முறையில் இதுவரையில் வரையப்படவில்லை என்பது மட்டுமல்லாமல், இதுகாறும் வெளிவந்துள்ள வரலாறுகள் தமிழ் நாட்டின் உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளை மாற்றியும், மறைத்தும், திருத்தியும் கூறியிருப்பதால், சிறந்த முறையில் தமிழ் நாட்டின் வரலாற்றைத் தொகுக்க வேண்டுமென்று தமிழ்வல்ல வரலாற்றறிஞர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

மு-மொ:-அ. பொன்னம்பலனர்.
வ-மொ:-தில்லைவில்லாளன்

(6) திருச்சி, சென்னை. வானொலி நிலயத்தார் மக்கள் அறிவைப் பாழாக்கும் புராணக் கதைகளுக்கும், பிரசாரத்துக்கும் இடங்கொடுத்து; சமுதாய வளர்ச்சியைக் கெடுப்பதை இந்த மாநாடு கண்டிப்பதோடு; தமிழர் சமுதாய வளர்ச்சிக்கு இப்போது மிகவும் முக்கியமான தேவையாக இருக்கும் குறள் விரிவுரைகள் வாரந் தவருமல் நடத்த வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மாநாட்டுத் தலைவர் பாரதிதாசன் கொண்டு வந்த தீர்மானம்.

(7) முத்தமிழ் வளர்ச்சிக்கான பலவித ஆக்க வேலைகளைப் புரியவும், தமிழுக்கு இழைக்கப்பட்டுள்ள மாசுகளைப் போக்கிக்காத்துவளர்க்கவும்

'முத்தமிழ்ப் பெருமன்றம்' என்ற நிறுவனத்தை நிறுவ வேண்டுமென இம்மாநாடு முடிவு செய்கிறது.

தலைவர் ச. சோமசுந்தரபாரதியார் எம் ஏ. பி. எல். அவர்கள்.

துணைத் தலைவர்கள் காஅப்பாத்துரை எம். ஏ. எல் டி. அ. அய்யாமுத்து, வி. எஸ் செங்கோட்டையா,

செயலாளர்: பாரதிதாசன்
பொருளாளர்: எஸ். ஆர். சுப்பரமணியம்.

கேரளத்தில் நேரு

திருவனந்தபுரம் மே 31—இன்றுமாலை இந்திய முதலமைச்சர் பண்டித நேரு திருவனந்தபுரத்துக்கு வருகை தந்தார். 18 ஆகஸ்டுக்குப்பின் நேரு திருவனந்தபுரத்துக்கு வந்துள்ளார் ஆகவே, ஆயிரக்கணக்கில் மக்கள் அவரைக் காண குழுமியிருந்தனர்.

கூட்டத்திடையே தோழர் நேரு திறந்த மோட்டாரில் பவனிவந்தார். பின்னர் விருந்தில்லம் நோக்கி விரைந்து சென்றார்.

கோடீஸ்வரனாக வழி!

அமெரிக்க பணமூட்டைகள் கூறும் யோசனை

லண்டன், ஜூன். 1—கோடீஸ்வரனாக ஒருவர் 7 வழிகளை அனுசரிக்க வேண்டியது அவசியம் என்று 7 அமெரிக்க செல்வந்தர்கள் கூறியிருக்கிறார்கள். பின்கண்ட அம்முறைகளை அனுசரித்துதான் அவர்கள் கோடீஸ்வரர் ஆனார்களாம்.

1. சொந்தமாக சிந்தனை செய். அதை நன்றாகப் பயன்படுத்தும்படி உபயோகி.
2. அதற்கு நல்ல விளம்பரம் செய்திருக்கிறாயா என்பதைக் கவனி.
3. மார்க்கெட் விவகாரங்களில் நல்ல அனுபவமும், தீர்க்கதரிசனமும் வேண்டும்.
4. உங்கள் வழியைப் பிறர் [illegible] அடையக்கூடாது.
5. புதிய புதிதாக எதையாவது கண்டு பிடிப்பதில் உற்சாகத்தைக் காண்பி.
6. உங்களுக்குரிய காலம் வரும் வரை பொறுமையுடனிருக்கவும்.
7. சந்தர்ப்பம் கிடைக்கும்போது நன்கு பயன் படுத்திக்கொள்.

பள்ளிக்கூடம் பாசறையாகிறது!

சிங்கப்பூர், ஜூன். 1—ஒரு சீனப்பள்ளிக்கூடத்தை சிங்கப்பூர் போலீசார் சோதனையிட்டு அங்கு கிடைத்த சில தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியதுடன் 19 மாணவர்களையும், ஒரு ஆசிரியரையும் கைது செய்திருக்கின்றனர்.

இனி நடப்பவை

மு. நா. மேலூப்பட்டி:—தமிழர் நூல் நிலையத்தின் சார்பில் 4-6-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு தமிழர் நூல் நிலையத்தில் செப்பனிட்ட கூட்டம் நடைபெறும். அதுசமயம் தாய்மொழி என்னும் பொருள்பற்றி பலர் பேசுவார்கள்.

* * *

குகை, சேலம்:—திருவள்ளுவர் நிலையத்தின் 9-ம் ஆண்டு விழா, 3&4 6-50 திருச்சிரோட் ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் சமரச சன்மார்க்க சபையில் நடைபெறும். அவ்வமயம் தோழர் எஸ். எஸ். அருணகிரிநாதசுவாமிகள் தலைமை வகிப்பார்.

* * *

(வட ஆற்காடு) வேலூர்:—4—6—50 மாலை 6 மணிக்கு, நகர திராவிட முன்னேற்றக் கழக சார்பாக பொதுக்கூட்டம் கோட்டை வெளியில் நடைபெறும். ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இ.பி. [illegible] சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

* * *

சங்கரனைனார்கோவில்:—தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 3—6—50-ல் 8-மணி அளவில் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் இல்லத்தில் நடைபெறும்.

இரண்டு ஆண்டுகளில் நானூறு புத்தகங்களுக்குத் தடை

—(...)—

தி. மு. கழகத்தினரின் ஆர்வத்தின் எதிரொலியே முத்தமிழ் மாநாடு

முத்தமிழ் மாநாட்டில் தி. மு. க. தோழர்கள் முழக்கம்

மாநாட்டுத் தலைவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இரண்டாவது நாள் பிற்பகலில் வரத் தாமதம் ஏற்பட்டதால், சென்னைத் தோழர் டி. ஷண்முகம் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

தோழியர் மூவாலூர் ராமாமிர்தத்தம்மையார், பெண்கள் இழிவுசெய்யப்பட்டுள்ளதைப் பற்றிப் பேசுகையில், இந்த மதத்தால் பெண் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள இழிவைப் போக்க முன்வரவேண்டுமென்றும், வெட்கப்பட்டுக்கொண்டு வீட்டுக்குள் புகுந்துகொண்டிருப்பதால் ஒரு பயனும் கிடையாதென்றும் கூறினார். ஆயிரம் ஆண்கள் சாதிக்கக் கூடியதொரு வேலையைப் பத்துபெண்கள் சுலபத்தில் முடித்துவிட முடியுமென்றும், சர்க்கார், பெண்களுக்குத்தான் அதிகம் பயப்படுவார்கள் என்றும் கூறினார். குழந்தைகளைத் தாலாட்டும்போதும், சோறு ஊட்டும்போதும் சீர்திருத்தத்தைச் சேர்த்துக் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டுமென்றும் கூறினார்.

திருமணத்தில் உபயோகப்படுத்தப்படும் ஆரிய மந்திரங்கள் ஆபாசமானவை, அவைகளை உபயோகப்படுத்துவதைப் பெண்கள் எதிர்க்கவேண்டுமென்று தோழியர் ராமாமிர்தத்தம்மையார் அறிவித்தார். நாட்டியத் தொழில்; விபசாரிகளின் தொழில் அதைச் சென்று பார்க்காதீர்கள் என்று கூறிய ஒரு சமூகம், இன்று வீட்டுக்கு வீடு நடனமாதர்களை உண்டாக்கிவருகிறதென்றும் அவ்வம்மையார் கூறினார். நாட்டியத்தில் பிற்போக்கானவையும், ஆண்களின் காமஉணர்ச்சியைக் கிளரக்கூடியனவும், பெண்களின் தன்மானத்தைப் பாதிக்கக்கூடியதுமான பாடல்களை விட்டொழிக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்.

பின்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியைத் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கட்டாய பாடமாக வைப்பதைக் கண்டித்துக் கொண்டுவந்த தீர்மானத்தை முன்மொழிந்த தோழர் மதியழகன் பேசுகையில், முத்தமிழ் வளரவேண்டுமானால், வளம்பெறவேண்டுமானால் இந்தியை நுழைவிடக்கூடாதென்றும் களை இருக்குமானால் பயிர் வளராதென்றும் கூறினார். மூன்று மொழிகளை மாணவர்கள் படிக்க வேண்டுமென்றும், இதில் தமிழ் ஒன்று இருக்க வேண்டிய அவசியமில்லையென்றும், சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவு தமிழரைக் கேலி செய்வதாக உள்ளதென்றும் அவர் கூறினார். இந்தி மொழி பேசுவோரின் தாசர்களாக நம்மை ஆக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறதென்றும், தமிழ்நாட்டில், தமிழ் படிக்க வேண்டுமென்று பேச வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது வருந்தக் கூடியதாகுமென்று கூறினார்.

ஒருபெரிய போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்று கூறி, அவர் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தோழர் சேலம் ஏ. சித்தையன் தீர்மானத்தை ஆதரித்துப் பின்மொழிகையில், தி. மு. க. சார்பில் இப்போன்ற திடமான தீர்மானம் கொண்டு வருவதற்குக் காரணம், தமிழ் வளர்ச்சி மாநாட்டில் கூடியவர்களைவிட, அதிகத் தைரியம் காட்டுவதுடன் அதிக அக்கரைகொண்டவர்களாக இருப்பதால்தான் என்று கூறினார். மத்திய சர்க்கார் அடிக்கடி நம் மாகாணத்தைத்தான் பயமுறுத்துகிறார்களென்றும், நாம் உடனே நடவடிக்கையில் இறங்காவிட்டால் நிலைமை மோசமாகிவிடுமென்றும் அறிவித்தார்.

இந்தியை எதிர்ப்பவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அறிஞர் அண்ணாதுரை உடனே துவக்க வேண்டுமென்று நான் இம்மாநாட்டில் கேட்டுக்கொள்கிறேனென்று கூறினார்

அத்தீர்மானத்தைத் தோழர் ராமஅரங்கண்ணலும் வழிமொழிந்தார்.

தமிழை அரசியல் மொழியாக்கியதற்காக இலங்கை சர்க்காரைப் பாராட்டியும், சென்னை சர்க்காரின் பிற்போக்கைக் கண்டித்தும் கொண்டு வந்ததீர்மானத்தைப்பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம் முன்மொழிகையில், இலங்கை சர்க்காரைப் பாராட்டியபின், திருச்சி மாவட்டத்தில் தமிழ்மொழியிலேயேசர்க்கார்வேலைகளை நடத்தும் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தவில்லையென்று கூறினார். நீதிமன்றங்களிலெல்லாம் ஆங்கிலம் அதிகம் உபயோகப்படுத்துவதுடன், நீதிமன்ற அலுவல்கள் ஆங்கிலத்தில்தான எழுதப்படுகின்றன வென்று அறிவித்தார்.

மற்றும் தோழர் நார. நாச்சியப்பன், பண்டித அ. கிருஷ்ணசாமி, ஆகியவர்களும் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

முத்தமிழ் வளர்ச்சி பற்றிக் கொண்டுவந்த தீர்மானத்தைத் தோழர் காஞ்சி. கலியாணசுந்தரம் முன்மொழிகையில் நாம் செய்வதையெல்லாம்சர்க்கார் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை விட்டு, நம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறினார்.

தோழர்கள். சின்னத்துரை அ. ச. நடராஜன் ஆகியவர்கள் தீர்மானத்தை வழிமொழிந்தார்கள்.

ஏடுகளைச் சர்க்கார் தடை செய்வதைக் கண்டித்துக் கொண்டுவந்த தீர்மானத்தை தோழர் காஞ்சி. மணிமொழியார் முன்மொழிகையில், காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டு 2 ஆண்டுகள் முடிவடைவதற்குள் 400 புத்தகங்கள் தடை செய்துள்ளனரென்று அறிவித்தார். பாரதிதாசன் எழுதியுள்ள 'இரணியன்' என்ற நாடகமும், அண்ணா எழுதிய பல நூல்களும் தடைசெய்யப்பட்டுள்ளனவென்று அவர் அறிவித்தார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், முத்தமிழ் மாமன்றம் அமைப்பதுபற்றியும், அதனுடைய நிர்வாகப் பொறுப்பையும் விளக்கினார்.

சி. என். அண்ணாத்துரை அவர்கள் முத்தமிழ் மாநாட்டின் நோக்கத்தை விளக்கி ஒரு மணி நேரம் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். தொடர்ந்து தோழர்கள் ராசமாணிக்கம், டி. வி. நமச்சிவயம், ஆகியவர்கள் இசைவிருந்தளித்தார்கள்.

இரவு 'நீதிதேவன் மயக்கம்' சி. என். ஏ. குழுவினரால் மாநாட்டு மேடையில் நடிக்கப்பட்டது. முடிவாக வரவேற்புக் கமிட்டித் தலைவர் தோழர் ஈ. வே. கி. சம்பத் அனைவர்க்கும் நன்றி கூற, மாநாடு இரவு 2-மணிக்குச் சிறப்புடன் முடிவுற்றது.

மாநாட்டை வெற்றியுடன் நடத்தியதோழர்கள்பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ராஜமாணிக்கம், எஸ். ஆர். சுப்பிரமணியம், சி. வி. கோபால்சங்கரையா ஆகியவர்கள் பாராட்டுதல்களுக்கு உரியவர்கள்ஆவார்கள்.

தொண்டர்படைத் தலைவர்கள் தோழர்கள் அ. ச. நடராஜன், ஆதிசிவன், ராமானுஜம், கந்தசாமி ஆகியவர்களும், மற்றும் வெளியூர்களிலிருந்து வந்திருந்தவர்களுக்குப் பேருதவியாக இருந்த தொண்டர்களின் சேவை மிகவும் பாராட்டக்கூடியதாகும்

மாநாட்டுப்பந்தலை அழகுற அமைக்க உதவிய அலங்காரக் குழுவினர், தோழர்கள் சின்னதுரை, மார்ட்டின், தனபால் ஆகியவர்களாவார்கள்

அசோகாபார்க்கு கம்பெனியார், மாநாட்டில் திரண்டிருந்த மக்களுக்கு, இலவசமாக சாந்த அட்டகளை வைத்துக் குடிதண்ணீர் வழங்கினார்கள்.

ஜப்பானிய தொழிலாளர் சுரண்டப்படுகின்றனர்

ஜப்பானில் அமெரிக்காவின் அட்டகாசம்

'இஸ்வெஸ்தவா' கண்டனம்

மாஸ்கோ, மே 30—

சோவியத் அரசாங்க செய்தித் தாளான 'இஸ்வெஸ்தவா' புரொபசர் பாபோவ் என்பவர், ஜப்பானில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் முறையைக் கண்டித்து ஒரு கட்டுரை தீட்டியுள்ளார் அதில்:—

'மகஆர்தர் தலைமையில் புதுப்பயிற்சி பெற்றுவரும் ஜப்பானிய இராணுவத்தையும், இராணுவ முக்கியத்வம் வாய்ந்த தொழில்களையும், அமெரிக்க முதலாளிகள் ஊக்கிவளர்த்து வருகிறார்கள். இம்முயற்சி அமெரிக்க ஆளும் வர்க்கத்தினரால் தூண்டப்பட்ட முயற்சியாகும். இதன் மூலம் தூரக்கிழக்கில் ஜப்பானை ஒரு இராணுவ தளமாக ஆக்க முயலுகிறது அமெரிக்கா

அமெரிக்க முதலாளிகள் குறைந்த கூலியைக்கொடுத்து, ஜப்பானிய தொழிலாளிகளின் உழைப்பை உறிஞ்சி வருகின்றனர். ஜப்பானிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்து கொள்ளை லாபமடிக்கின்றனர் ஜப்பானையும், மற்ற நாடுகளையும் சுரண்டும் நோக்கத்தோடு, அமெரிக்கர் தம்முடைய ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைத்தும் வருகின்றனர்"

———

ஸ்மட்ஸ் அரசியல் துறவு?

கேப்டவுன், ஜூன் 1—

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் இத்தடவை நிமோனியா ஜுரத்திலிருந்து குணமடைந்தபின் அநேகமாக மீண்டும் அரசியலில் பிரவேசிக்கமாட்டார் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது. பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸுக்கு பதிலாக தக்க வாரிசு அவர் கட்சிக்கு இன்னும் யாரும் ஏற்படுத்தப்படவில்லை. நேற்று சிறிது குணம் காணப்பட்டாலும் அடுத்த சில தினங்கள் ஸ்மட்ஸின் உடல்நிலை கவலையளிப்பதாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.

———

லண்டன் மியூஸியத்திலுள்ள புராதனப் பொருள்கள்

குழந்தைகள் தொட்டுப் பார்க்கலாம்

லண்டன், ஜூன் 1—

லண்டன் மியூஸியத்திலுள்ள 3000 ஆண்டிற்கு முற்பட்ட எகிப்திய பொருள்கள், நகைகள் முதலியவைகளைக் கையினால் எடுத்துப் பார்க்கக் குழந்தைகள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிகிறது. ஏனெனில் தொட்டுப் பார்ப்பது மூலம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாமாம்.

வெளியேற்றும் படலம்!

பெர்லின், ஜூன் 1—

பெர்லினிலிருந்து நேச நாட்டினரை விரட்டுவதற்காக ரஷ்யா ஒரு திட்டத்தை ஆரம்பிக்க விருப்பதாகத் தெரிகிறது என்று இங்குள்ள விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இந்த போராட்டம் சமீபத்தில் தலைமையில்தான் இருக்கும் என்றும் நேசப்படைகள் மீது கை வைக்கும் கட்டத்திற்கு இன்னும் ரஷ்யா வந்துவிடாதென்றும் டெய்லி டெலிகிராப் பெர்லின் நிருபர் கூறுகிறார்

———

திருடர்களைக் கண்டு பிடிக்க புதுவழி

லண்டன், ஜூன் 1—

ஒரு திருட்டுக் கூட்டத்தைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் அளிப்பதாக மஸாசூசெட்ஸ் அட்டர்னி ஜெனரல் அறிவித்திருக்கிறார். தகவல் தெரிவிப்பவர்கள் கடிதத்தின் ஓரத்தில் நம்பர் போட்டு அனுப்பவேண்டும் என்றும் அத்தகவலினால் திருடர் பிடிபட்டால் அந்த நம்பர் பிரசுரிக்கப்படும் என்றும் அதற்குரியவர் வந்து பரிசைபெற்றுச் செல்லலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

———

உறந்தை வள்ளுவர் மன்றம்

உறையூர், மே. 30—

உறந்தை வள்ளுவர் மன்ற திருக்குறள் கட்டுரைப்போட்டி முடிவு சிறு மாற்றம்.

பல அசந்தர்ப்பங்களை முன்னிட்டு இவ் மன்ற ஆண்டுவிழா ஜூலை 16 தேதி நடக்கவிருப்பதாலும், உறந்தை வள்ளுவர் மன்ற திருக்குறள் கட்டுரைப்போட்டி முடிவு வெளியிடப்படுவது 30—5—50 தேதிக்குள் என்பதை 31—6—50 தேதிக்கு என மாற்றப்பட்டிருக்கின்றது.

———

பஞ்சாப் சட்டசபை உப-தேர்தல்

சோஷலிஸ்டுகள் போட்டியிடமாட்டார்கள்

புதுடில்லி, ஜூன். 1—

பஞ்சாப் சட்டசபையில் பிரோஸ்பூர் தொகுதிக்கு நடைபெறவிருக்கும் உபதேர்தலில் போட்டியிடுவதில்லை என்று, பஞ்சாப் சோஷலிஸ்ட் கட்சி தீர்மானித்திருக்கிறது.

தேர்தலில் பழைய வாக்காளர் ஜாபிதாவிலுள்ளவர்களைகொண்டே வோட்டுப்போடச் செய்வதை ஆட்சேபித்தே இம்முடிவு செய்யப்பட்டதாக கட்சியின் காரியதரிசி தோழர் திலக்ராஜ்சாடா கூறினார்.

சோஷலிஸ்ட் கட்சியினர், அமிர்தசரஸ் தொகுதிக்கு நடந்த உபதேர்தலில் நடுநிலைமை வகித்தது போல், இதிலும் நடுநிலைமை வகிப்பர்.

தி. மு. கழகச் சொற்பொழிவு

4-6-50

வேலூர் (வட ஆற்காடு) :—ர வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. ...றரசு

புழல் (செங்குன்றம்) :— எஸ். வி. நடராசன், எஸ். ஜீ. ப... தினம்.

பருக் மன்னரின் காதல் நாடகம்

17-வயது அழகியை மணந்து வாழ ஸ்விஸ்ஸில் அரண்மனை!

லண்டன், மே 1—

17 வயது அழகி நெரிமான் ஸாடெக் என்பவளை மணந்து, உல்லாச வாழ்க்கையை நடத்த எகிப்து மன்னர் பருக், ஸ்விட்ஸர்லாந்தில் ஒரு அழகான மாளிகையை வாங்க முயற்சி செய்து வருவதாக ஜான்ஹில் என்ற நிருபர் ஜினிவாவிலிருந்து டெய்லி மெயிலுக்கு தெரிவித்திருக்கிறார்.

இக்கட்டழகியைக்கண்டதும்பருக் காதல் கொண்டதாக சொல்லப்படுகிறது.

ஜினிவா ஏரிக்கரையிலுள்ள எவ்வளவோ உல்லாச அரண்மனைகள், பருக் அனுப்பியுள்ள ஏஜெண்டினால் பார்வையிடப்பட்டு வருகின்றனவாம்.

ஒரு அரண்மனையின் சொந்தக்காரி இவ்விஷயமாகக் கூறுகையில், யாரோ ஒரு எகிப்தியர் கட்டிடத்தை வந்து பார்த்ததாகவும், ஒரு உயர்ந்த அந்தஸ்திலுள்ளவருக்காகதான் இடத்தைப் பார்வையிடுவதாகவும அவருடைய காதலிக்கு இந்த அரண்மனை பிடித்தால் அதைக் கட்டாயம் வாங்கிக்கொள்வார் என்றும் கூறியதாக தெரிவித்தாள்.

பெர்னேயிலுள்ள எகிப்திய ஸ்தானீகருக்குக்கூட இந்தஎகிப்திய ஏஜெண்டு வந்தகாரியம் தெரியாதென்று சொல்லப்படுகிறது.

பருக் மன்னர் சீக்கிரமே ஜினிவா வரலாம் என்று, இங்குள்ள எகிப்திய அதிகாரிகள் நம்புகின்றனர்.

செருப்பு தைத்து பிழைத்தவர்சீமானுனர்

லண்டன், மே 31—

பிரிட்டனில் செருப்பு தைக்கும் தொழிலில் வெகு நாட்களாக ஈடுபட்டிருந்தவரான கார்னெட் உல்லிலி என்பவர், இப்பொழுது பிரபுவானர் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

இவரின் மூதாதையர் பிரிட்டனில் பெரிய பிரபுவாய் இருந்தாரும், ஆனல் 100 ஆண்டிற்கு ஒரு முறைதான் அப்பிரபுவின் சந்ததியில் தோன்றுபவர்களுக்கு இந்தப் பாக்கியம் கிடைப்பதென்றும் கூறப்படுகிறது.

இப் புதிய பிரபுவிற்கு வயது 35. இவருக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையாம். சென்ற யுத்தத்தில் அவர் "கார் போர்" பதவி வகித்திருந்ததாகவும் தெரியவருகிறது

வெளிநாட்டு படிப்புக்கு உபகாரச் சம்பளம்

வெளிநாட்டுப் படிப்புக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதற்கான திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் படி, இந்த வருஷம் ஆறு பேருக்கு உபகாரச்சம்பளம் வழங்குவதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒரு பரீட்சை நடத்தி இந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும்.

இந்த உபகாரச் சம்பளங்கள் பற்றிய முழு விவரங்களும் கூடிய சீக்கிரம் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுல் வெளியிடப்படும். இத் தேர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அந்த அறிவிப்பில் வெளியிடப்படும் நடைமுறைப்படி கமிஷனுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

இந்த உபகாரச் சம்பளங்கள் பற்றிமேற்கொண்டு தகவல்கோரும் கடிதமெதுவும் இனிமேல் மத்திய கல்வி மந்திரி காரியாலயத்துக்கு அனுப்பப்படக்கூடாது.

அமெரிக்க சினிமாப் படத்திற்கு எதிர்ப்பு

லண்டன், ஜூன் 1—

ஹிந்துமதம், இஸ்லாம், புத்தமதம் ஆகிய மூன்று மதங்களையும் பழிக்கும்படியான காட்சிகள் கொண்ட "பிரைட் ஆப் தி ஈஸ்ட்" (Bride of the East) என்ற அமெரிக்க சினிமாப்படம், வெளியிடவே லாயக்கற்றது என்று இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஹைகமிஷனர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனல் இதுபற்றி இத்தினம் வரையில் எதுவும்கூற மறுத்துவிட்டனர். இப்படம் அமெரிக்காவில் யுத்தத்திற்கு முன்பு எடுக்கப்பட்டதாகும். இப்படம் இரண்டு வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் தணிக்கை போர்டு முன் காட்டப்பட்டபோது இப்படத்தில் சில இடங்கள் மிகவும் ஆட்சேபகரமாக இருக்கிறதென்றும், ஆகவே அவைகளை சத்தரிக்கோல் பிரயோகத்திற்கு உட்படுத்த வேண்டும் என்றனர். இதற்குவிநியோகஸ்தர்கள் சம்மதிக்காததால் படம் வெளிவிட முடியாது போய் விட்டது.

இப்பொழுது மற்றொரு விநியோகஸ்தர் இதை வாங்கி எப்படியாவது படத்தை வெளியிடலைசென்ஸைப் பெறுவது என்று முயன்று வருகிறார். இதன்பேரில் லண்டன் கவுண்டி கவுன்ஸில் கமிட்டி இந்தியா இலங்கை, பாக் ஹைகமிஷனர்களை இப்படத்தைப்பார்க்கும்படி கேட்டதாகத்தெரிகிறது.

இப்படத்தைப் பார்த்த ஒரு பாகிஸ்தானி அதிகாரி, மூன்று மதங்களைப் பழிக்கும் இப்படத்தை வெளியிட அனுமதிப்பது அவ்வளவு நல்லதல்ல என்றும், இதனுல் மனக்கசப்பு ஏற்படுவது நிச்சயம் என்றும் கூறினர்.

ஹைகமிஷனர்கள் வெளியிடும் யோசனைகளுக்கு மதிப்பு வைத்து இப்படம் விஷயமாக முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

ஏசிக்கொள்ளும் ஏடுகள்!

பாக்தாத், ஜூன் 1—

'அல்ஹவாடித்' 'அல்ஹாலெட்' என்கிற இரு இராக் பத்திரிகைகள், ஒன்றை யொன்று திட்டி எழுதி வருவதால், இரண்டையும் நிறுத்தி வைக்கும்படி இராக் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

பாதுகைப் பரீட்சை

லண்டன், ஜூன் 1—

பல்வேறு தோல்களில் செய்யப்பட்ட செருப்புகள், பூட்ஸ்கள் எவ்வளவுகாலம் தேயாமல் இருக்கும் என்பதை பரீட்சைசெய்ய 5 சோல்ஜர்கள் 12 மாதங்களில் 6000மைல்களுக்குமேல் நடந்துசென்றிருக்கின்றனர்.

பாக்-பாரசீக நட்புடன்படிக்கை

பாக்தாத், ஜூன் 1—

பாகிஸ்தானுடன் பாரசீக சர்க்கார் செய்துகொண்டுள்ள நட்பு உடன்படிக்கையை, பாரசீக செனெட் அங்கீகரித்துவிட்டது என்று டெஹ்ரான் ரேடியோ அறிவிக்கிறது.

எல்லோருக்கும் வைத்திய வசதி

ஸிட்னி, ஜூன். 1—

ஆஸ்திரேலியாவில், எல்லா மக்களுக்கும் வைத்திய வசதி கிடைக்கும்படியான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சுரு மீன் எண்ணெய் நாற்றத்தைப் போக்க புதிய வழி

சுருமீன் எண்ணெயில் "ஏ" வைடமின் சத்து சாதாரண மீனெண்ணெயில் 'காட் லிவர் ஆயில்' இருப்பதைவிட, மிக அதிகமாக இருந்தபோதிலும், இதிலுள்ள கவிச்ச நாற்றம் காரணமாக இந்த எண்ணெய் அதிகப் பிரபலமடையவில்லை. சுருமீன் எண்ணெயிலிருந்து இந்த நாற்றத்தை அகற்றுவது, இந்தத் தொழிலுக்கு மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது.

இதுபற்றி பம்பாய் சர்வகலாசாலையின் ரசாயனத் தொழில் ஆராய்ச்சி இலாகா நடத்திவந்த பல்வேறு பரிசோதனைகளின் விவரங்கள் அடங்கிய கட்டுரை ஒன்று, விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சி சஞ்சிகையில் மே மாத இதழில் பிரசுரமாகியிருக்கிறது. வெண்ணெயை சேர்க்கப்பட்டால், நர்வெல்லமாவு, புளிக்காய்ச்சிய பால், டோமடோ பழம் போன்ற "உறிஞ்சு"ப் பொருள்களை, தனி—ஆல்கஉறால், ப்ராபலின் க்ளைகால், கார்பன் டெட்ரோ க்ளோரைட், பென்ஸின், அஸிடோன். பெட்ரோலியம், ஈதர் போன்ற "கரைப்பான்"களுடன் கலந்து உபயோகித்துப்பார்க்கப்பட்டது. சுருமீனெண்ணெயுடன் 'உறிஞ்சி' பொருளையும், 'கரைப்பான்" பொருளையும் ஒன்றாகக் கலந்து, வெகுஸ்தானத் தொட்டியில் இரண்டுமணிநேரம் கொட்டிக் கலக்கி, காற்றுப்புகாத நிலையில், "கரைப்பான்" பொருள் வடிகட்டி எடுக்கப்பட்டது. ஆல்கஉறாலையும் ப்ராபிலின் க்ளைகாலையும் வெண்ணெய் எடுத்த பால்களுடன் கலந்து உபயோகித்து இவ்வாறு பரிசோதித்துப் பார்த்ததில் திருப்திகரமான பலன் கிடைத்திருக்கிறது. இவ்வாறு செய்ததில் "வைடமின்" சத்து ஒரு சதவிகிதம் குறைந்திருந்தது. ஆனல் மீன் நீச்சம் பெரிதும் குறைந்திருந்தது.

சுத்தமான கடலை எண்ணெய், பாமின் எண்ணெய், ஆல்கஉறால், அஸிடோன் ஆகிய பொருள்களும் உபயோகித்துப் பார்க்கப்பட்டன. கடலை எண்ணெயை உபயோகித்ததில் நல்ல பலன் கிடைத்தது.

மரவள்ளிக்கிழங்கு மாவையும், சர்க்கரைவள்ளிக்கிழங்கு மாவையும் கலந்து தயாரிக்கப்படும் செயற்கை அரிசி போன்ற, தனி உணவுப் பொருள்களின் போஷாக்குச் சத்துப்பற்றி, மைசூரிலுள்ள மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்தப்பட்டுவரும் ஆராய்ச்சிகள் பற்றி, கட்டுரை யொன்றும் இந்த இதழில் வெளியாகியிருக்கிறது. மரவள்ளிக்கிழங்கு மாவு சர்க்கரைவள்ளிக்கிழங்கு மாவு, இரண்டோடுங்கூட, நிலக்கடலை மாவையும் கலந்து உபயோகித்தால் போஷாக்குச் சத்து அதிகமாக இருக்குமென்று இவ்வாராய்ச்சிகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

மக்காச்சோள மாவிலிருந்தும் அரிசி தயாரிக்கலாமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அரிசியைப் பற்றிக் கவலையில்லையென்றுல், சோளத்தையும், கேப்பையையும் கூட இதற்கு உபயோகிக்கலாம். ஜவ்வரிசியும், ஜவ்வரிசி போன்ற பொருள்களும் தயாரிப்பதற்கு கிழங்கு வகைகளின் மாவுகளையும் ஸ்டார்ச்சையும் உபயோகிக்கலாம்.

அதி சுத்தமான எலெக்ட்ரானிக் மாங்கனிஸ் டையாக்ஸைட், பாதி இளைப்பான்கள், ஸ்டிகம்ஸ் ஆகியவை உற்பத்தி, திரவக பசைப் பொருள்களின் பாதுகாப்பு ஆகியவை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்த இதழில் வெளியாகியுள்ளவற்றின் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த இதழின் தலையங்கம் 'உணவும் மக்களும்" என்பது பற்றியதாகும்.

ஸிட்னி ஜூன் 1—

ஆஸ்திரேலியா தன் ராணுவத்திற்காக சுமார் 4500 பேர்களை பிரிட்டனில் சேர்த்து வருகிறது.

திருமண அழைப்பு

இராமனுதன்-முத்துலெட்சுமி திருமணம்

4—6—50 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30-மணிக்கு சிறுகுடியில்

தோழர் அண்ணுத்துரை M. A. தலைமையில் நடைபெறும்

அவ்வமயம் தோழர்கள் இரா. செழியன், எம். ஏ, அ. பொன்னம்பலனுர், மற்றநண்பர்களும், சொற்பொழிவு ஆற்றுவார்கள். அன்பர்கள் இதையே அழைப்பாக ஏற்று சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆரு. சுப. கதிரேசன் திருப்பத்தூர், (இராமனுதபுரம்)

சுப. மு. இராமனுதன் சிறுகுடி (மதுரை)

8-வது கடைசி வாரம்

கிரௌனில்

கோவிந்தன் கம்பெனியாரின்

மருதநாட்டு இளவரசி

கதை வசனம்: மு. கருணாநிதி

தினசரி 3 காட்சிகள்

மாலை 2-45, 6.00 இரவு 9-30

இன்றே குடும்பத்துடன் கண்டு களியுங்கள்

தையலில் தையலரேகெட்டிக்காரர்

புதுடில்லி, ஜூன், 1—

இந்தியப்பெண்கள் தைக்கும் தொழிலில் ஆண்களைவிட மிகவும் கெட்டிக்காரர்கள். ஆனல், அவர்கள் தங்கள் உடைகளைத் தையற்காரர்களிடம் கொடுத்து தைத்து அணிகின்றதால்தான் அவர்களுக்கு அதிருப்தி. பெண்தையல்காரர்களையே பெண்கள் ஆதரிக்கவேண்டும் என்பதற்கு செய்யப்பட்ட முயற்சிகள் வீணாகிவிட்டனவென்று டில்லிகிஜனல் புனரமைப்பு டைரக்டர் கர்னல் வர்மா கூறுகிறார்.

பெண்களின் இத்தகைய மனப்போக்கினுல் பெண்கள் கூட்டுறவு பயிற்சிக்கான சர்க்கார் திட்டம் நடைபெற முடியாது போய்விட்டது என்றும் அவர் கூறுகிறார்.

மேனுடுகளில் உடை தைப்பவர்கள் ஆண்களேயாகும்.

அறிக்கை

மதுரை மாவட்ட மூலாவது தி. மு. கழகமாநாட்டுக்குத் தீர்மானங்கள் அனுப்புகிறவர்கள், 5-6-50-க்குள் மாநாட்டு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எம். அய்யாசாமி

வரவேற்பு உறுப்பினர்

மதுரை மா. தி. மு. க. மு. மாநாடு

மேதாப் பம்பாய் வருகை

புதுடில்லி, ஜூன். 1—

இந்திய சர்க்காரில்கைத்தொழில் சம்பந்த மந்திரியாக உள்ள மந்திரி மேதாப், ஜூன் 10ந் தேதி நிலைமையை நேரில் அறிய பம்பாய் வருகிறார்.

அவர் பம்பாயிலுள்ள கைத்தொழில் முதலாளிகளையும் சந்திப்பேசுவார். ஜூன் 14 தேதி ஜவுளி ஆலோசனைக் கமிட்டியில் அவர் பேசுவார்.

பின்பு அவர் அகமதாபாத்திற்கு விஜயம்செய்துவிட்டு டில்லிதிரும்புவார்.

'மலேயா கப்பலின்' மணி

லண்டன், ஜூன். 1—

'எச். எம். எஸ். மலேயா' கப்பலில் இருந்த மணியை மலேயா சுல்தான்களுக்கு பரிசாக பிரிட்டிஷ் சர்க்கார் அளித்திருக்கிறது.

அறிவிப்பு

ரெஜினு மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

நன்றியறிவிப்பு

கடந்த 22-5-50 அத்துக்குடியில் நடந்த எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வந்து எங்களுக்கு நல்வாழ்த்துக்களும், அன்பளிப்புகளும் வழங்கிய உள்ளூர், வெளியூர் தோழர்களுக்கும், உறவினர்களுக்கும் எங்கள் வணக்கமும் நன்றியறிதலும்.

லீலாபுஷ்பம்

உ வெற்றிவேல், பி. ஏ.

விலங்குகள் வீணைகளாகின்றன

புதுடில்லி, ஜூன் 1—

சிறைகளில் கைதிகளுக்கு கை, கால்களில் போடப்படும் விலங்குகள் கூட இனிமையான நாதத்தை எழுப்பக்கூடிய சங்கீத கருவிகளே என்பது ஜில்லாபோர்ட்டை அடுத்த 'லாக்கப்'பில் நடைபெற்ற சம்பவத்திலிருந்து தெரியவந்தது. அந்த லாக்கப்பில் இருந்த இரு கைதிகள் சுமார் ஒரு மணி நேரம் ஆடிப்பாட ஆரம்பித்துவிட்டனர். அப்போதுதான் கைவிலங்குகள் கூட இனிமையான நாதத்தை எழுப்பக்கூடும் என்பது தெரியவந்தது.

'பொய்யாமொழி'

ஜெயங்கொண்டம் தோழர் எம். பாஸ்கரன், "பொய்யா மொழி" என்ற வார இதழுக்கு ஆசிரியராகவும், பிரசுரிப்போராகவும் இருந்து அதனை வெளியிட முயற்சிசெய்து வருகிறார். (ந-தி)

திருத்தம்

சென்னை 27-5-50, வெளியூர் 28-5-50 'மாலை மணி'யில் வெளிவந்திருக்கும் தி மு. க. தலைமை நிலைய கட்டிட நிதிப் பட்டியலில் பி எம் துரைசாமி ஐயன்புரம் ரூ. 11-0-0 என்றிருப்பதை, ஐயன்புரம தி மு க. கிளைக்கழகம் ரூ 11 என்று திருத்திக்கொள்ளவும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.